Tamil
தமிழ்

# 2021 VCE எழுத்துத் தேர்வுகளை முடிக்கும் மாணவர்களுக்கு வழிகாட்டுதல்

## (Guidance for students completing 2021 VCE written examinations)

2021 VCE தேர்வுகள் வழிகாட்டியில் (2021 VCE Exams Navigator) உள்ள VCE எழுத்துத் தேர்வுகள் தொடர்பான அறிவுரைகளுடன் பின்வரும் தகவல்களை நீங்கள் படிக்க வேண்டும். VCE வெளிப்புற மதிப்பீடுகளுக்கான அங்கீகரிக்கப்பட்ட தகவல்கள் மற்றும் உபகரணங்கள் (Approved materials and equipment for VCE external assessments), VCAA விதிகள் (VCAA rules) , 2021 VCE தேர்வு கால அட்டவணை (2021 VCE examination timetable) , விசேஷட முன்னேற்பாடுகள் (Special Provision) தொடர்பான பிரிவுகளில் தயவுசெய்து கவனம் செலுத்துங்கள்

*இந்தத் தகவல் மாணவர்களை நோக்கியதாக இருந்தாலும், கோவிட் பாதுகாப்பான (COVIDSafe) சூழலில் மதிப்பீடுகள் நடத்தப்படுவதை உறுதி செய்யும் நடைமுறைகள் குறித்து குடும்பங்கள்/பராமரிப்பாளர்கள் அறிந்திருக்கிறார்கள் என்பதை உறுதிப்படுத்தவும் இது வழங்கப்படுகிறது.*

VCE க்கான இறுதி முடிவுகளை நிர்ணயிப்பதில் VCE எழுத்துத் தேர்வுகள் முக்கிய பங்கு வகிக்கும் அதே வேளையில், நீங்கள் COVID-19 காரணமாக உங்கள் VCE எழுத்துமூல தேர்வுகள் எதையும் முடிக்க முடியாவிட்டால், நீங்கள் ஒரு தேர்வு மதிப்பெண் கணக்கீடுக்கு (Derived Examination Score) DES) விண்ணப்பிக்க முடியும்.

ஒரு DES ஆனது உங்கள் மிதமான பள்ளி அடிப்படையிலான மதிப்பீடுகள், கல்வியில் வேறு எந்த வெளிப்புற மதிப்பீடுகள், உங்கள் பொது சாதனை தேர்வு (General Achievement Test (GAT)) முடிவுகள் மற்றும் உங்கள் பள்ளியால் வழங்கப்படும் மேலதிகத் தரவுகளைப் பயன்படுத்தி கணக்கிடப்படுகிறது.

நீங்கள் நியாயமான மற்றும் நம்பகமான முடிவுகளைப் பெறுவதை உறுதி செய்வதற்காக VCAA செயல்முறைகளைச் செய்துள்ளது.

உங்கள் பள்ளி உங்களுக்கு பின்வருவனவற்றை வழங்கியிருப்பதை உறுதி செய்ய வேண்டும்:

- ஒவ்வொரு தேர்வுக்கும் தேதி, நேரம் மற்றும் சரியான இடம் பட்டியலிடப்பட்ட உங்கள் **தனிப்பட்ட மாணவர் தேர்வு/மதிப்பீட்டு கால அட்டவணையின்** நகல், அத்துடன் ஒவ்வொரு தேர்வுக்கும் ஒரு DES விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதற்கான இறுதி தேதிகள், மற்றும் பொருத்தமுள்ளதாயின்
- எந்தவொரு தேர்வுக்கும் VCAA சிறப்புத் தேர்வு ஏற்பாடுகளை அங்கீகரித்துள்ள உங்கள் **சிறப்புத் தேர்வு ஏற்பாடுகளின் அறிவுரைச் சீட்டின் நகல்**.

## VCE எழுத்துமூல தேர்வுகளை COVID பாதுகாப்பானதாக்க (COVIDSafe) என்ன நடவடிக்கைகள் எடுக்கப்படும்?

VCE எழுத்துமூல தேர்வுகள் உங்கள் பள்ளியிலோ அல்லது உங்கள் கல்வி வழங்குநரின் ஆலோசனைப்படி வேறு இடத்திலோ நடைபெறும். அனைத்து விக்டோரியன் பள்ளிகளும் மற்றும் பிற முதுநிலை இரண்டாம் நிலை வழங்குநர்களும் ஒரு COVID பாதுகாப்பு (COVIDSafe) திட்டத்தை வைத்திருக்க வேண்டும்

அனைத்து மாணவர்கள், மேற்பார்வையாளர்கள் மற்றும் பள்ளி ஊழியர்களின் நலன் பேணுதலுக்காக பரீட்சை சூழல் கோவிட் பாதுகாப்பானது (COVIDSafe) என்பதை உறுதிப்படுத்த சுகாதாரத் துறையால் (Department of Health) அங்கீகரிக்கப்பட்ட பல பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இந்த பாதுகாப்பு நடவடிக்கைகள் உள்ளடங்கும்:

- வந்தவுடன் ஒரு பதிவு செயல்முறை
- 4 சதுர மீட்டருக்கு ஒரு மாணவர் என்ற இடைவெளியை நடைமுறையை பேணுதல், உடல் தூரத் தேவைகளை ஆதரிக்கும் வகையில் மண்டபத்தை அமைத்தல்; மற்றும்
- ஒவ்வொரு தேர்வுக்கும் முன்னும் பின்னும் மேசைகள் மற்றும் நாற்காலிகளை கிருமி நீக்கம் செய்தல்,அதே போல் மற்ற அதிகம் தொடப்படும் மேற்பரப்புகள் நாள் முழுவதும் அடிக்கடி கிருமி நீக்கம் செய்தல்,

## கோவிட் பாதுகாப்பாக (COVIDSafe) இருக்க நான் என்ன செய்ய வேண்டும்?

**நீங்கள் கண்டிப்பாக**:

- விக்டோரியன் பள்ளிகளுக்கான தற்போதைய வழிகாட்டுதலின் படி, உங்கள் இயலாமை அல்லது மருத்துவ நிலை காரணமாக உங்களுக்கு விலக்கு

இல்லையென்றால், உங்கள் மூக்கு மற்றும் வாயை மறைக்கும் முகமூடியை அணியுங்கள். நீங்கள் வரும் போது, தேர்வு முழுவதும், மற்றும் நீங்கள் வெளியேறும்போது உட்பட, எப்போதும் உங்கள் முகமூடியை அணிய வேண்டும்.

- நுழையும் போதும், மண்டபத்தினுள்ளும் மற்றும் வெளியேறும் போதும் வழக்கமான கை சுகாதாரத்தைச் செய்யவும்; மற்றும்
- உடல் ரீதியான தூரத்தை பராமரிக்கவும், மற்றவர்களிடமிருந்து குறைந்தபட்சம் 1.5 மீட்டர் தூரத்தில் இருக்கவும்

## எனக்கு இயலாமை, நோய் அல்லது பிற சூழ்நிலை இருப்பதனால், நான் கோவிட் -19 (COVID-19) க்கு தாக்குதலுக்காளாகக்கூடிய ஆளாக இருந்தால் நான் என்ன செய்ய வேண்டும்?

உங்களுக்கு இயலாமை, நோய் அல்லது பிற சூழ்நிலை இருந்தால், நீங்கள் கோவிட்-19 (COVID-19) உடன் மிகவும் நோய்வாய்ப்பட வாய்ப்புள்ளது என்றால், ஏதேனும் சிறப்புத் தேர்வு ஏற்பாடுகளை பற்றி உங்கள் பள்ளியுடன் கலந்தாலோசிக்க வேண்டும். இது உங்கள் எழுத்துமூலத் தேர்வை(வுகளை) பள்ளி வளாகத்தில் தனித்தனியாக தகுந்த ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு கட்டுப்பாடுகளுடன் செய்ய அனுமதிக்கும்.

## தேர்வு நாள் ஒன்றில் அல்லது அந்த வாரத்தில் எனக்கு உடல்நிலை சரியில்லாமல் இருந்தால் நான் என்ன செய்ய வேண்டும்?

உங்களுக்கு உடல்நிலை சரியில்லாமல் இருந்தால் அல்லது கோவிட் -19 (COVID-19) இன் பின்வரும் அறிகுறிகள் ஏதேனும் இருந்தால், அது இலேசானதாக இருந்தாலும், நீங்கள் தேர்வில் **கலந்து கொள்ளக் கூடாது**.

- வாசனைத் திறன் அல்லது சுவைத் திறன் இழப்பு
- காய்ச்சல், குளிர்க்காய்ச்சல் அல்லது வியர்த்தல்
- இருமல் அல்லது தொண்டை வலி அல்லது மூக்கு ஒழுகுதல்
- மூச்சுத்திணறல்
- சில சூழ்நிலைகளில் தலைவலி, தசைப்புண், குமட்டல், வாந்தி மற்றும்/அல்லது வயிற்றுப்போக்கு போன்றவையும் ஆகியவை அறிகுறிகளாகக் கருதப்படலாம்.

இந்த அறிகுறிகள் ஏதேனும் இருந்தால் மேலதிக ஆலோசனைக்கு உங்கள் பள்ளியைத் தொடர்பு கொள்ளுங்கள். சீக்கிரம் கோவிட் -19 (COVID-19) க்கு பரிசோதனை செய்து முடிவு வரும்வரை வீட்டிலேயே இருங்கள். நீங்கள் ஒரு VCE மாணவர் என்று பரிசோதனை தளத்தில் அல்லது பரிசோதனை செய்பவரிடம் தெரிவிக்கவும், ஏனெனில் VCE மாணவர்களுக்கு முன்னுரிமை சோதனை

செயலாக்கம் வழங்கப்பட்டுள்ளது, இது சாத்தியமான வேகமான பரிசோதனை முடிவு நேரத்தை அனுமதிக்கிறது

கோவிட் -19 (COVID-19) நோய்க் **குறி சார்ந்த** சோதனையின் முடிவுக்காக நீங்கள் காத்திருந்தால் வீட்டில் இருக்க வேண்டும்

நீங்கள் வரும்பொழுது ஏதேனும் கோவிட் -19 (COVID-19) அறிகுறிகளைக் காண்பித்தால் அல்லது தேர்வின் போது உங்களுக்கு உடல்நிலை சரியில்லாமல் இருந்தால், நீங்கள் ஒரு தனிப் பகுதியில் இருக்கும்படி கேட்கப்படுவீர்கள், மேலும் உங்களை அழைத்துச் செல்ல உங்கள் பெற்றோர் அல்லது பராமரிப்பாளர் அழைக்கப்படுவார்.

**தேர்வு நாளில் உங்களுக்கு கோவிட் -19 ( COVID-19)அறிகுறிகளுடன் உடல்நிலை சரியில்லாமல் இருந்தால், நீங்கள் உங்கள் தேர்வில் கலந்து கொள்ளக்கூடாது.**

நீங்கள் பரிசோதனை செய்து உங்கள் முடிவுகளைப் பெறும் வரை வீட்டிலேயே இருக்க வேண்டும். நீங்கள் ஒரு தேர்வில் கலந்து கொள்ள முடியாவிட்டால், நீங்கள் ஒரு DES க்கு விண்ணப்பிக்க தகுதி பெறுவீர்கள்.

VCE எழுத்துத் தேர்வில் கலந்துகொள்வதன் மூலம், உங்களுக்கு COVID-19 இல்லை என்பதையும், COVID-19 உடன் ஒத்த எந்த அறிகுறிகளும் இல்லை என்பதையும் உறுதிப்படுத்துகிறீர்கள்.

## வேறு எந்த சூழ்நிலையில் நான் ஒரு தேர்வில் கலந்து கொள்ளக் கூடாது?

பரீட்சை நாளில் உடல்நிலை சரியில்லாமல் இருப்பதைத் தவிர, நீங்கள் COVID-19 க்கு பரிசோதனை செய்து கோவிட் -19 (COVID-19) இருப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தால் அல்லது கோவிட் -19 (COVID-19) **நோய்க்குறி சார்ந்த** சோதனையின் முடிவுக்காகக் காத்திருந்தால் எழுத்துத் தேர்வில் **கலந்து கொள்ளக்கூடாது**. இந்த சூழ்நிலைகளில், நீங்கள் ஒரு DES க்கு விண்ணப்பிக்க தகுதி பெறுவீர்கள்.

## நான் ஒரு முக்கிய நெருங்கிய தொடர்புடையவர் (Primary Close Contact (PCC)) என அடையாளம் காணப்பட்டால் என்ன செய்வது?

முக்கிய நெருங்கிய தொடர்புடையவராக (Primary Close Contact) அடையாளம் காணப்பட்ட மாணவர்கள் தங்கள் பள்ளியில் உள்ள ஒதுக்கப்பட்ட ஒரு அறையில் தங்கள் எழுத்துத் தேர்வுகளை எழுத முடியும் என்று சுகாதாரத் துறை (Department of Health) உறுதிப்படுத்தியுள்ளது.

நீங்கள் ஒரு முக்கிய நெருங்கிய தொடர்புடையவராக (Primary Close Contact) அடையாளம் காணப்பட்டால், நீங்கள் சுகாதாரத் துறையின் (Department of Health)

வழிகாட்டுதல்களைப் பின்பற்ற வேண்டும், மேலும் நீங்கள் பின்பற்ற வேண்டிய பின்வரும் ஏற்பாடுகளை நீங்கள் புரிந்துகொள்வதை உறுதிப்படுத்த உங்கள் பள்ளி உங்களைத் தொடர்பு கொள்ளும்:

- முழுமையாக தடுப்பூசி போடப்பட்டாலும் அல்லது முழுமையாக தடுப்பூசி போடப்படாவிட்டாலும் தனிமைப்படுத்தல் மற்றும் கோவிட் -19 (COVID-19) பரிசோதனை தேவைகள் ; மற்றும்
- எழுத்துமூலம் தேர்வுகள் செய்யும் ஒவ்வொரு நாளும் உங்கள் பயணம் மற்றும் உடல்நலம் மற்றும் பாதுகாப்பு தேவைகள் .

## COVID-19 காரணமாக DES க்கு விண்ணப்பிக்க எனக்கு என்ன ஆதாரம் தேவை?

உங்களின் ஒரு தேர்வை பூர்த்தி செய்ய அனுமதிக்கப்படவில்லை அல்லது கோவிட்-19 (COVID-19) காரணமாக உங்கள் செயல்திறன் கணிசமாகப் பாதிக்கப்பட்டிருந்தால் நீங்கள் ஒரு DES க்கு விண்ணப்பிக்க தகுதியுடையவராக இருப்பீர்கள்.

தேவைப்படும் சான்றுகள் உள்ளடங்கும்:

- பள்ளியில் இருந்து ஆதரவுக் கடிதம்/சம்பவ அறிக்கை; மற்றும்
- கோவிட் -19 (COVID-19) க்கான சோதனைக்கான சான்றுகள் - ஒரு சுயாதீன சுகாதார நிபுணரின் மருத்துவச் சான்றிதழ் சோதனைக்கு பரிந்துரை போன்றவை

## கோவிட் -19( COVID-19)காரணமாக பள்ளி மூடப்படல்

கோவிட் -19 (COVID-19) காரணமாக உங்கள் பள்ளி தற்காலிகமாக மூடப்பட்டு, அதன் விளைவாக ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தேர்வுகளை நடத்த முடியாவிட்டால், உங்களுக்கு பாதகமில்லாமல் இருப்பதை உறுதி செய்ய உங்கள் பள்ளி VCAA உடன் செயல்படும். இது நடந்தால் நீங்கள் DES க்கு விண்ணப்பிக்க வேண்டியதில்லை.

## மன ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வுக்காக எனக்கு என்ன ஆதரவு உள்ளது?

VCE வெளிப்புற மதிப்பீடுகளின் போது பொது மன அழுத்தம் மற்றும் கவலையின் உணர்வுகளை நீங்களும் உங்கள் குடும்பத்தினரும் உணரலாம். உங்களில் சிலர் இந்த உணர்வுகளிலிருந்து உந்துதல் பெறலாம், ஆனால் மற்றவர்களுக்கு குடும்பம், நண்பர்கள், நம்பகமான ஆசிரியர் அல்லது மருத்துவ அல்லது மனநல நிபுணரின் கூடுதல் ஆதரவு தேவைப்படலாம்.

© VCAA

நீங்கள் கடந்த காலத்தில் ஒரு மருத்துவ அல்லது மனநல நிபுணருடன் பணிபுரிந்திருந்தால், உங்களுக்கும், உங்கள் குடும்பத்தினருக்கும், நண்பர்களுக்கும் அல்லது பள்ளிக்கும் இருக்கும் ஏதேனும் கவலையை தீவிரமாக நிர்வகிக்கவும் உத்திகளை புதுப்பிக்கவும் இப்போது ஒரு நல்ல சந்தர்ப்பமாக இருக்கலாம்.

உங்களுக்கு பலவிதமான ஆதரவுகள் பின்வருவன போல உள்ளன:

- Mental health toolkit *மனநல கருவித்தொகுப்பு* (education.vic.gov.au)
- https://www.education.vic.gov.au/Documents/school/teachers/health/mentalhealth/quick-guide-to-student-mental-health-and-wellbeing-resources.pdf

## எனது மதிப்பீட்டிற்கு முன் நான் வேறு எப்படி பாதுகாப்பாக இருக்க முடியும்?

12 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட அனைத்து விக்டோரியர்களும் இப்போது கோவிட் -19 (COVID-19) தடுப்பூசி பெற தகுதியுடையவர்கள் eligible to receive a COVID-19 vaccine. தடுப்பூசி போடுவதே உங்களையும் உங்கள் குடும்பத்தையும் எங்கள் பள்ளி சமூகத்தையும் மேலும் திடீரென்று தோன்றிப் பரவுவதிலிருந்து மற்றும் கோவிட் -19 (COVID-19) பரவுவதிலிருந்து பாதுகாக்க சிறந்த வழியாகும்.

தேர்வுகளுக்கு தடுப்பூசி கட்டாயமில்லை, ஆனால் உங்கள் மருத்துவர் உங்களுக்கு தடுப்பூசி எடுக்க வேண்டாமென அறிவுரை வழங்கி இருந்தாலே தவிர இது மிகவும் ஊக்குவிக்கப்படுகிறது. தடுப்பூசி மற்றும் உங்கள் தனிப்பட்ட சுகாதார சூழ்நிலைகள் பற்றி ஏதேனும் கேள்விகள் இருந்தால் தயவுசெய்து உங்கள் மருத்துவரிடம் பேசுங்கள்.

அனைத்து மாணவர்களும் தங்கள் தேர்வுக்கு முன் முதல் ஊசிக்கு முன்பதிவு செய்ய ஊக்குவிக்கப்படுகிறார்கள். உங்கள் தேர்வின் போது சோர்வு, தலைவலி, தசை வலி, காய்ச்சல் மற்றும் குளிர்க்காய்ச்சல் மற்றும்/அல்லது மூட்டு வலி போன்ற பொதுவான ஆனால் கடுமையற்ற பக்கவிளைவுகளைத் தவிர்ப்பதற்காக, பரீட்சை நடைபெறும் நாள் அல்லது தேர்வுக்கு முந்தைய நாள் முதல் தடுப்பூசி போட வேண்டாம் என பரிந்துரைக்கப்படுகிறது.

மேலும் தகவலுக்கு, சுகாதாரத்துறை இணைய தளத்தைப் பார்வையிடவும்: குழந்தைகள் மற்றும் இளைஞர்களுக்கான தடுப்பூசி தகவல் | கொரோனா வைரஸ் விக்டோரியா (Vaccination information for children and teenagers | Coronavirus Victoria). இதில் மொழிபெயர்க்கப்பட்ட தகவல்கள் அடங்கும்: கோவிட் -19 தடுப்பூசிகள் பற்றிய மொழிபெயர்க்கப்பட்ட தகவல் Translated information about COVID-19 vaccines | Coronavirus Victoria.

COVID-19 க்கு ஆளாகாமல் இருக்க, உங்கள் எழுத்துமூலத் தேர்வுகளுக்கு முந்தைய நாட்கள் மற்றும் வாரங்களில் முடிந்தவரை COVID-Safe கோவிட் பாதுகாப்பாக இருக்க ஊக்குவிக்கப்படுகிறீர்கள். அதிக நடமாட்டம் உள்ள பொது இடங்கள் அல்லது பொதுப் போக்குவரத்தை முடிந்தவரை தவிர்ப்பது இதில் அடங்கும்.

## பெற்றோர்/பராமரிப்பாளர்களுக்கு என்ன வழிகள் உள்ளன?

பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை எப்படி சிறந்த முறையில் ஆதரிப்பது என்பது சில நேரங்களில் கடினமாக இருக்கலாம். பெற்றோர் மற்றும் பராமரிப்பாளர்களுக்கு வழிகள் பின்வருமாறு:

- பெற்றோர்கள் தங்கள் குழந்தையின் ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வை ஆதரிக்க உதவிக்குறிப்புகள் (Tips for parents to support their child's health and wellbeing)
- கற்பவர்களை வளர்ப்பது பற்றிய வலையொளி (பொட்காஸ்ட்) தொடர் Raising Learners Podcast Series.

## மேலதிக தகவல்களை நான் எங்கே பார்க்கலாம்?

மேலும் சுகாதார ஆலோசனைகளுக்கு 24 மணி நேர கோவிட் -19 COVID-19 ஹாட்லைனை 1800 675 398, உங்கள் பொது வைத்தியரை தொடர்பு கொள்ளலாம் அல்லது சுகாதாரத் துறை இணையதளத்தைப் பார்க்கவும் https://www.dhhs.vic.gov.au/victorian-public-coronavirus-disease-covid-19#what-are-the-symptoms-of-coronavirus-covid-19.